தரை பந்தல், கதிரைகள், சில்வர் கப், பீங்கான் இன்னும் பல உபகரணங்களை வாடகைக்கு பெற நாடுங்கள்

"ஒளி இல்லம்"

210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

For all Ceremonies
At your homes
Our service available.

OLI ILLAM

210, Main Street,
[Near St. James Church]
Jaffna.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 09 புதன்கிழமை (23-06-1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 207

# தடை நீக்கப்பட்ட பொருள்கள் விரைவில் யாழ். வந்து சேரும்!

## அரச அதிபர், ஜனாதிபதியின் தூதுவர் இருவரும் உறுதி தெரிவிக்கின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 23

தடை நீக்கப்பட்ட பொருள்கள் விரைவில் வடக்கே வந்து சேரும். அவற்றை எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என யாழ் அரச அதிபரும், ஜனாதிபதியின் தூதுவராக யாழ் வந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவும் உறுதி தெரிவித்திருக்கின்றனர்.

நேற்று கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்ற யாழ் அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர், கொழும்பு புறப்படுவதற்கு முன்னர் உதயனுக்குத் தகவல் வெளியிடுகையில் —

"கொழும்பு சென்றதும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடனும் ஜனாதிபதியுடனும் பேச்சு நடத்தி ஒரு கப்பலில் பெற்றோல், டீசல் உட்பட தடை நீக்கப்பட்ட பொருள்களை இங்கு எடுத்து வர ஏற்பாடு செய்வேன்." — என்றார்.

இந்த விடயம் குறித்து "புலிகளின் குரல்" வானொலிக்கு பேட்டியளிக்கையில் பிரிகேடியர் வீரசேகரா தெரிவித்ததாவது:-

கைதிகளை விடுவிக்க ஏழு பொருள்கள் மீதான தடையை நீக்குமாறு புலிகள் கோரினர்.

புலிகளின் நிபந்தனைகளை அரசு ஏற்றுள்ளது.

மேற்குறித்த பொருள்களை யாழ். குடாநாட்டுக்குத் தொடர்ந்து அனுப்பி வைக்க நிபந்தனையின்றி அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## லலித் கொலையில் லெபனான் தொடர்பு?

கொழும்பு, ஜூன் 23

முன்னாள் அமைச்சர் அத்துலத்முதலியின் கொலையில் லெபனான் தொடர்பு இருப்பதாக குற்றத்தடுப்புப் பணியகம் கண்டு பிடித்துள்ளதாம்.

அத்துலத்முதலியை சுட்டுக் கொல்வதற்கு பயன்படுத்திய தாகக் கூறப்படும் பிஸ்டல் செக்கோஸ்லோவாக்கியாவில் தயாரிக்கப்பட்டது என்றும் — அதை உற்பத்தி செய்த செக் நாட்டின் மெக்ரபரி நிறுவனம் அதனை 1984 இல் லெபனானின் உள்ளூர் ஸ்டோர் ஒன்றுக்கு விற்பனை செய்த தகவும் விசாரணையில் இருந்து தெரியவருகிறது.

வடபகுதியைச் சேர்ந்த தீவிரவாதக் குழு ஒன்றைச் சேர்ந்தவர்கள், லெபனானில் கெரில்லா பயிற்சி பெற்றுக் கொண்ட சமயம் இந்த பிஸ்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

உறுதி மொழியை ஸ்ரீலங்கா அரசு மீறியது

## அபிவிருத்திக்கு வெளிநாடுகள் வழங்கிய நிதி யுத்தத்துக்கு!

### உலக வங்கிக் குழு கண்டுபிடித்தது

கொழும்பு, ஜூன் 23

கடந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சிப் பணிகளுக்கு எனக் கிடைத்த வெளிநாட்டு நிதி உதவிகளில் ஒரு பகுதி வடக்கு - கிழக்கு யுத்தத்தை நடத்துவதற்கு பயன்படுத்தப் பட்டதை உலக வங்கிக் குழு ஒன்று கண்டுபிடித்துள்ளது.

உயர் நிலை அதிகார வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

கொழும்பு வந்திருந்த உலக வங்கித் தூதுக் குழுவினர் இது பற்றி திறைசேரி உயர் அதிகாரிகளை விசாரித்தனர் என்றும் —

அதன் பின்னர், உலக வங்கியின் தெற்காசிய இயக்குநர் போல் இஸென்மன் தலைமையில் அந்தக் குழுவினர் ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்தித்துப் பேசினார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு உதவும் நாடுகள் வழங்கிய நிதியில் ஒரு பகுதியே யுத்தத்துக்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் உலக வங்கிக் குழு தெரிவித்தது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

ஒதுக்கப்பட்ட 1,980 கோடி ரூபா போதாதாம்

## பாதுகாப்புச் செலவுகளுக்கு மேலும் ரூ. 800 கோடி தேவை

கொழும்பு, ஜூன் 23

பாதுகாப்புச் செலவுக்காக மேலும் 800 கோடி ரூபாவை ஒதுக்கும்படி பாதுகாப்பு அமைச்சு அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

1993 இல் பாதுகாப்புச் செலவுக்காக அரசாங்கம் ஆயிரத்து 980 கோடி ரூபாவை முதலில் ஒதுக்கியிருந்தது.

இப்போது பாதுகாப்பு அமைச்சு மேலதிகமாக 800 கோடி ரூபாவை ஒதுக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

1993 இல் பாதுகாப்புச் செலவினமாக ஆயிரத்து 600 கோடி ரூபா பயன்படுத்தப் பட்டது என்று கொழும்பு வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

அமைச்சர் ஹமீத் அறிவிப்பு

## சர்வசன வாக்கெடுப்பு கிழக்கில் அவசியமில்லை

### முஸ்லிம் பிரமுகர்கள் பலரின் கருத்தும் இதுவே!

கொழும்பு, ஜூன் 23

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிகள் தொடர வேண்டும். காணக்கூடிய எந்த ஒரு தீர்வும் கிழக்கில் பாரம்பரியமாக ஒன்றிணைந்து வாழ்ந்து வந்த தமிழ் சமூகத்தையும் முஸ்லிம் சமூகத்தையும் நிரந்தரமாக பிரிப்பதாக அமையக்கூடாது கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு அவசியம் இல்லை.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் நீதி உயர்கல்வி அமைச்சர் ஜனாப். ஏ. சி. எஸ் ஹமீத் மேற்கண்டவாறு கூறினார்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் அமைச்சர்கள் முஸ்லிம் எம்.பிக்கள் முன்னாள் முஸ்லிம் எம். பிக்கள், மற்றும் முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## நியூயோர்க் குண்டு வெடிப்பு சந்தேகநபர் இலங்கையில்?

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள உலக வர்த்தக நிலையத்தில் கடந்த பெப்ரவரியில் இடம்பெற்ற மிகப் பெரும் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட முக்கிய சந்தேகநபர் ஒருவர் இலங்கைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

இவ்வாறு அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை [எவ். பி. ஐ] அறிவித்துள்ளது.

ஈரானைச் சேர்ந்த ரன்ஸி அஹமட் யூசுவ் என்ற இந்தச் சந்தேகநபரை கைது செய்ய உதவுமாறு இலங்கைப் பொலிஸாரை எவ். பி. ஐ. கேட்டுள்ளது.

குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தவுடன் மேற்படி சந்தேகநபர் அமெரிக்காவை விட்டுத் தப்பிச் சென்றுவிட்டார் என்றும் தெரிவிக்கப் பட்டது. (உ-6)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக

## இந்தியாவுடன் கூட்டுமுயற்சி என்ற பேச்சுக்கே இடமில்லை

### புதுடில்லியில் ரணில் தகவல்

புதுடில்லி, ஜூன் 23

இலங்கைப் பிரச்சினையை — இனப்பிரச்சினையைத் — தீர்க்கும் விடயத்தில் இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே கூட்டுமுயற்சி எதுவும் இடம்பெறலாம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியாவுடன் சேர்ந்து கூட்டு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் யோசனை எதுவும் இல்லை யாது.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா.

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## பூநகரிப் பாதை விரைவில் திறக்கப்படுமா?

கொழும்பு, ஜூன் 23

பூநகரி — சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பது தொடர்பாக அரசுக்கும் புலிகளுக்கும் இடையே பல மாதங்களாக மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டு வந்த அருட்தந்தை ஐ. நா. தூதர் —

விரைவில் தமது முயற்சி வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கையை வெளியிடக் கூடிய நிலைக்கு இப்போது வந்துள்ளார்.

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

## யாழ். இளைஞர் லண்டனில் குத்திக்கொலை

கொழும்பு, ஜூன், 23

தமிழ் இளைஞர் ஒருவர் கடந்த வாரம் லண்டனில் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்திரபோஸ் அமரசிங்கம் (வயது 29) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

லண்டனில் உள்ள சவுத் தோல் என்னுமிடத்தில் பூங்கா ஒன்றில் இவரது சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

உதைபந்தாட்ட விளையாட்டுக்குப் பெயர் பெற்ற 'வெம்பிளி' பகுதியில் இந்த இளைஞர் இலத்திரனியல் வியாபாரம் செய்து வந்தார். அவரது 47 வயதான சகோதரர் ஒருவரும் லண்டனில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## ஹமீத்தின் புதிய அமைப்பு

கொழும்பு, ஜூன் 23

முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு ஒன்றை அமைச்சர் சாகுல் ஹமீது தொடங்கியுள்ளார்.

அண்மையில் நடந்த மாகாணசபைத் தேர்தல்களில் தெரிவான முஸ்லிம் உறுப்பினர்களின் எண்ணிக்கை 33 இல் இருந்து 19 ஆக வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து இந்த புதிய அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## 'சில்' வைப்பு

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் விஞ்ஞான ஆலோசகரான கலாநிதி சிறில் பொன்னம்பெருமாவின் தலைமையில் இயங்கி வந்த விஞ்ஞான ஆலோசனை பணியகம் [illegible] செயலிழந்து [illegible] இறது. (உ-6)

## பொருள் விநியோகம் குறித்து இன்றுகாலை முக்கிய கூட்டம்

### யாழ். செயலகத்தில் நடக்கும்

கொழும்பு, ஜூன் 23

யாழ் மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாடும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளும் பற்றி ஆராய்வதற்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். திணைக்களத் தலைவர்களையும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர்களையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி யாழ் மேலதிக அரச அதிபர் திருமதி பத்மினியம்மா இலகநாயகம் போன் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்தியாவசியப் பொருள்கள் சம்பந்தமாக ப. நோ. கூ. சங்கங்களிலும் திணைக்களங்களிலும் ஏற்பட்டுள்ள பாதிப்பு, பிரச்சினைகள், தேவைகள் என்பன குறித்த கருத்துக்கள் இன்றைய கூட்டத்தில் கவனத்தில் எடுத்து ஆராயப்படும் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. [அ]

## வர்த்தகப் பிரதிநிதிகளின் கூட்டம் இன்று மாலையில்!

யாழ்ப்பாணம்' ஜூன் 23

யாழ். மாவட்டத்தில் உள்ள வர்த்தக சங்கங்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற வர்த்தகர்களின் சந்திப்பு ஒன்று இன்று மாலை 4 மணிக்கு விடுதலைப் புலிகளின் கோண்டாவில் அலுவலகத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் இடம்பெற இருக்கின்றது.

மிக முக்கிய — அத்தியாவசிய — பொருள்களின் கொள்வனவு மற்றும் விநியோகம் குறித்து இச்சந்திப்பில் ஆராயப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (உ)

## பிரிகேடியர் இன்று போய் நாளை வருவார்

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஜனாதிபதியின் தூதராக யாழ். வந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகர இன்று இங்கிருந்து கொழும்பு செல்வார் என்றும் —

கொழும்பில் அரசுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தி விட்டு நாளை மீண்டும் அவர் இங்கு திரும்புவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உ-3-5)

## யுத்தக் கைதிகள் ஐவர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 23

தமிழீழ விடுதலைப் புலிகளின் காவலில் இருந்த ஐந்து யுத்தக் கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டை அடுத்து முதற்கட்டமாக அந்த 5 யுத்தக் கைதிகளும் விடுவிக்கப்பட்டனர்.

கைதிகளை விடுதலை செய்யும் உத்தியோகபூர்வ நிகழ்ச்சி நேற்றுக் காலை நடந்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

விடுவிக்கப்பட்ட ஐவருடன்

## கைதிகளின் உறவினர்களில் 28 பேர் கொழும்பு திரும்பினர்

கொழும்பு, ஜூன் 23

விடுதலைப் புலிகளின் காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட ஐந்து யுத்தக் கைதிகளும், ஐந்து பேரின் உறவினர்கள் பத்துப் பேரும், மற்றும் நற்றுப் போது காவலில் உள்ள ஏனைய யுத்தக் கைதிகளின் உறவினர்களில் 18 பேரும் 4-45 மணியளவில் நேற்று மாலை விசேட விமானத்தில் கொழும்பு திரும்பினர்.

நேற்று முற்பகல் 11-30 மணியளவில் இவர்கள் அனைவரும் பருத்தித்துறையில் இருந்து கப்பல் மூலம் வழி அனுப்பி வைக்கப்பட்டனர்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, யாழ். மாவட்ட தளபதி திரு. அன்பு, நிதர்சனம்' பொறுப்பாளர் திரு. ஜவான் ஆகியோர் பருத்தித்துறையில் வைத்து அவர்களை வழியனுப்பி வைத்தனர்.

யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதி செல்வி எலிஸபெத் ருவின் ஆகியோர் கைதிகளுடன் கூடப் பயணம் செய்தனர்.

"நிராமர்" கப்பல் மூலம் முதலில் காங்கேசன்துறையை அடைந்த அவர்கள், பின்னர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் உ.அ.அ. பிரிவில் வாகனப் பதிவு 30 வரை

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மோட்டார் வாகனங்களை பதிவு செய்யும் செயல்பாட்டின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை தமது வாகனங்களைப் பதிவு செய்து கொள்ளாதவர்கள் உடன் அவற்றை பதிவு செய்யுமாறு கேட்கப் பட்டுள்ளது. (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம். முகவரி: திரு. பாஸ்கரன் வீடு, சோரப்புலம், வதிரி, கரவெட்டி, (நெல்லியடி ஆலங்கட்டை றோட்.) (26166)

### தேவை

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் தனிச்சக்கர வண்டியில் சோடா, ஐஸ் என்பன கமிசன் அடிப்படையில் விற்பனை செய்யக்கூடியவர்கள் தேவைப்படுகின்றனர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: உணவு பதனிடல் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், முதன்மைச் செயலகம், தாவடி. (இ/5282)

### மணமகள் தேவை

லண்டன் M. Sc. பொறியியலாளர், வயது 32, ஆயிலியம் 3ஆம் பாதம் செவ்வாய்க் குற்றமில்லை. தம்பியும், மைத்துனரும் பொறியியலாளர், 28 வயதுக்குக் குறைந்த, வெசித்த, அழகிய சைவசமய M. B. B. S. டாக்டர், கணக்காளர் B. Sc. மணமகள் தேவை. தொடர்பு சாதகத்துடன், இ. கனகசபாபதி விதானையார், 22, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை. (6-74)

### மாற்றம்

இதுவரை காலமாக 33, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (6245)

### மிட்டாய் வண்டில்

மிட்டாய் வியாபாரம் செய்யக்கூடிய, திரும்பும் சுருவி பொருத்தப்பட்ட, நடமாடும் மிட்டாய் வியாபார வண்டி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்லிகா ஸ்ரோர்ஸ், மத்திய சந்தையடி, மானிப்பாய். (26193)

### இலவச திருமணசேவை

37 வயது, பூசம், செவ்வாயற்ற, பிரான்சில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். சகல மணமக்களுக்கும் தொடர்பு:[ஞாயிறு காலையில்], த. விமலா, நாச்சிமார் கோவிலடி, (26202)

### ஒலிவ் ஸ்நானப் பவுடர்

சேங்காய், வெந்தயம், எலுமிச்சங்கோது, பயறு மற்றும் சிரசுக்கும், உடலுக்கும் இதமளிக்கும் மூலிகைகள் கொண்டு தயாரான ஒலிவ் ஸ்நானப் பவுடர். கொதி நீரில் ஊறவிட்டுப் பாவிக்கச் சிறந்த பயன், பக்கற் ஒன்று ரூபா 3/- மட்டும். மில்க்வைற். (சி-5294)

## அறிவித்தல்

உள்ளூராட்சி திணைக்களத்தினால் இம் மாதம் 4ஆம், 5ஆம், 6ஆம் திகதி யாழ் இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட சித்தமருத்துவம் சம்பந்தமான கண்காட்சியில் யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை பங்கு கொள்ளவில்லை.

செயலாளர்,
சித்த மருத்துவ மாணவர் மன்றம்.

(26201)

சக்தி மயம்
திருநெல்வேலி அருள்மிகு

## ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

## ★ இரதோற்சவம் ★

25-06-1993 வெள்ளிக்கிழமை அதிகாலை 5-00 மணிக்கு மூலஸ்தான பூஜை. 6-30 மணிக்கு வசந்த மண்டப் பூஜையுடன் அடியார்களிற்கு திருவருள் பாலிக்கும் வண்ணம் அன்னை பராசக்தி காஞ்சிப்பட்டாடை பள பளக்க தங்கச் சிலம்பு சலசலக்க சின்னப் பெண்போல் அன்ன நடை பயின்று ஆனந்தப் புன்முறுவல் பூத்த வண்ணம் இரதம் ஏற மும்மூர்த்திகளோடு வரும் கண்கொள்ளாக் காட்சியை நெஞ்சுருகத் தரிசித்து அன்னையின் திருவருள் கடாட்ஷத்தை பெற்றுய்யும் வண்ணம் வேட்டுக் கொள்கின்றோம்.

தீர்த்தோற்சவம்
26-06-1993 சனிக்கிழமை காலை 7-30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் 8-30மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

— தேவஸ்தானம்.

அகில முழுவதும் அன்னையின் கருணை வெள்ளம் கரைபுரண்டோட பிரார்த்திக்கின்றோம்.

அம்பிகை வர்த்தக நிலையம்,
நர்சிங் ஹேமடி, திருநெல்வேலி.

(26194)

முருகேசு குமரேசு
அவர்களின்

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 1936-03-23
உதிர்வு: 1986-04-16
திதி: 23-06-1993

எங்கள் குலதெய்வமே! எங்களை மாறாத துயரில் ஆழ்த்திவிட்டு நீங்கள் மீளாத் துயர் கொண்டதேனோ! உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி,
பிள்ளைகள்,
உறவினர்கள்.

லீலாவதி குமரேசு,
இல. 8, ஆடியபாதம் வீதி
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குமரேசு ஸ்ரீஜெயக்குமாரி
அவர்களின்

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 1971-07-14
உதிர்வு: 1989-06-07

எங்கள் ஆருயிர்ச் செல்வமே! ஆண்டுகள் நான்கு சென்றாலும், பசுமரத்தாணி போல் அழியாத சுவடாய் எங்கள் நெஞ்சில் நிறைந்து விட்டாய் நீயம்மா!

உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகிறோம்.

உன் பிரிவால் வாடும்:
அம்மா,
அண்ணாமார்,
தங்கை,
உறவினர்கள்.

(6276)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 18-05-1989
உதிர்வு: 24-05-1993

### அமரர் நாகலிங்கம் தயாபரன் (சிங்)

இத்தனை சடுதியாய் எங்களை விட்டு
நீ ஏகுவாய் என எண்ணிலோம்
எத்தனை ஆண்டுகள் போயிடினும்
உன் நினைவுகள் நீங்கிடுமா!

உங்கள் ஆத்மா இறைவனை சேர பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், உறவினர்,
நண்பர்கள்.

லக்ஷ்மி பேக்கரி,
அச்சுவேலிச் சந்தி,
சந்நிதி றோட், அச்சுவேலி. (6277)

## விண்ணக வாழ்வின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள்



தாயின் மடியில்: 11 — பங்குனி — 1966
தனக்கென முடிவு: 23 — ஆனி — 1988

செல்வன்
### பங்கிராஸ் ஏபிரகாம்லிங்கன் (BALAN)

நீ மறைந்து ஐந்தாண்டு
உன் நினைவு நெஞ்சில்
நீங்கவில்லை
எம் உயிர்கள் உன்னைச்
சேரும் வரை
உன் நினைவு நெஞ்சில்
நிலைக்குமையா!

அன்புச் சுடரே! ஆருயிரே! உன் நற்சாந்திக்காக, காலமெல்லாம் செபிப்போமையா.

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, அக்கா, அத்தான்,
அண்ணாமார், அண்ணி, உற்றார்,
உறவினர் மற்றும் நண்பர்கள்.

''மலர் பவனம்''
பாவலர் துரையப்பா வீதி,
தெல்லிப்பழை. (6279)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 02 — 04 — 1942
உதிர்வு: 24 — 05 — 1993

### அமரர் தம்பையா இலட்சுமணசாமி
(ஆசிரியர், சில்லாலை R. C. T. M. S)

திதி: திருதியை

எமதில்ல ஒளித்தீபம் ஏனிங்கு அணைந்ததையா
எம் கண்மணிகள் பாதையிலே-
இருள் கவிழ்ந்த தேனையா
உன் புகழ்தனை ஆசிரியர், மாணவர்-
இயம்பி வெம்புதையா
உன்னருமை சுற்றமெல்லாம் உன்நினைவில்-
அரற்றுதையா
இந்நாள் முப்பத்தொன்றாயிடினும் எம் இதயம்
தாங்கிடுமோ ஆறிடுமோ

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

நாவலடி ஒழுங்கை,
பண்டத்தரிப்பு. (26204)

எமது புதிய வெளியீடு
அர்ஜுன் — பானுப்பிரியாவின்

## கோகுலம்

வீடியோ விமல்,
117, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

(26211)

உ
ஓம் சிவ முருகா
சரவணை பள்ளம்புலம்
அருள்மிகு

## முருகமூர்த்தி திருக்கோவில் மஹோற்சவ விழா

மேற்படி ஆலயத்தில் 24-06-1993 தொடக்கம் 04-07-1993 வரை நடைபெற வேண்டிய வருடாந்த மஹோற்சவ விழாவை முன்னிட்டு, கொடியேற்ற தினமாகிய 24-06-1993 வியாழக்கிழமை [நாளை] மு.ப. 10-30 மணிக்கு, நல்லைக் கந்தன் ஆலயத்தில் முருகப் பெருமானுக்கு விசேட அபிஷேகமும், வழிபாடும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

இத்தருணம் அடியார்கள் யாவரும் வருகை தந்து, முருகப் பெருமானின் திருவருளைப் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேற்படி ஆலய அறங்காவற்
சபையினரும், உபயகாரர்களும்.

(26206)

## ஓராண்டு நினைவஞ்சலி



இம்மை: 03 — 09 — 1923
★
மறுமை: 04 — 07 — 1992

பண்பின் சிகரமான
### அமரர் தம்பையா செல்வத்துரை
(சட்டத்தரணி)

கால தேவன் கரம்பட்டு ஆண்டொன்று ஆனதையா
வானுலகில் உமக்கிறைவன் நிச்சயமாய் -
அளித்திடுவான்
நிலையான வீடொன்றையென்ற -
திடமனதுடனே நாம்
மலைபனவாய்க் குவிந்து நிற்கும் துன்பங்கள்-
அத்தனையும் சுமந்திடுவோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி,
உறவினர்கள், நண்பர்கள்.

இருபாலை,
கோப்பாய். (26207)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணகம்: 07 — 10 — 1947
விண்ணகம்: 03 — 07 — 1992

### அமரர் சின்னத்துரை தர்மலிங்கம் (குலம்)

திதி: 23-06-1993 புதன் பூர்வபக்க சதுர்த்தி

அன்னையாய் நீ மிளிர்ந்து வழங்கிய -
வாஞ்சைப்பெல்லாம்
உள்ளத்தே நாளும் எண்ணி உடலுயிர் -
சாம்புதையா!

— ச. சி. சேமன் குடும்பத்தினர்.

கண்டி வீதி,
பளை. (6272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### திருப்பம் பயன்தர...

தமிழ் மக்கள் மீது தினிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருக்கிறது.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்து, உண்ணாவிரதம் மேற்கொண்ட 39 யுத்தக் கைதிகளுக்கு உயிராபத்து நேராமல் தடுப்பதற்கும், அவர்களை விடுவிப்பதற்குமாகவே அரசாங்கம் இந்தத் திருப்பமான முடிவைச் செய்திருக்கிறது.

1991ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒன்பதாம் திகதி அப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த ஜெனரல் சிறில் ரணதுங்கா விடுத்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வடக்கு-கிழக்குப் பகுதி மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. மொத்தம் நாற்பத்தேழு வகைப் பொருள்களை வடக்கேயும், மூன்று பொருள்களைக் கிழக்கேயும் எடுத்து வருவதற்கு உத்தியோக ரீதியாகத் தடை விதிக்கப்பட்டது.

எனினும் அதற்குப் பல மாதங்களுக்கு முன்னரே யுத்தம் தொடங்கிய சில மாதங்களிலேயே உரிய அறிவித்தல் இன்றி, மக்களின் தேவைக்குரிய பல பொருள்களை எடுத்து வருவதனை பாதுகாப்புப் படையினர் தடுத்திருந்தனர்.

இந்தப் பொருளாதாரத் தடையை நீக்குமாறு அரசிடம் பல தடவைகள் கோரிக்கைகள் விடப்பட்டன. பொருளாதாரத் தடையை நீக்கக் கோரி தமிழீழத்தின் பல பகுதிகளிலும் மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தினர்.

ஆனால் பிரேமதாசா அரசு ஓர் அங்குலம் தானும் நகரவில்லை. கூட்டுப்படைக்கு— தெற்கின் இரண்டாவது அரசுக்கு— பொருளாதாரத் தடை என்று கேட்டாலே ஒவ்வாமை வந்துவிடுவதுண்டு.

விஜேதுங்கா அரசுத் தலைவராக வந்த பின்னரும், கடந்த சுமார் இரண்டு மாதங்களிலும் இது விடயத்தில் திருப்பம் எதுவும் ஏற்படும் என்று ஊகிக்க வல்ல சூழ்நிலை தோன்றியதில்லை. விடுதலைப் புலிகளின் உயர்தர ராஜதந்திரத்தினாலேயே அரசாங்கம் பொருளாதாரத் தடையை நீக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இந்தப் புதிய திருப்பம் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கைக் கஷ்டங்களில் ஓரளவையேனும் நீக்கும். நல்ல சூழ்நிலைக்கான இந்த ஆரம்பம் சுமுகமான அமைதியான ஒரு முடிவுக்கு இட்டுச் செல்ல வேண்டும். அதாவது தமிழர் பிரச்சினைக்கு நீதியான, நியாயமான ஒரு தீர்வுக்கான பாதையின் தொடக்கமாக இது அமையுமாயின் நாட்டிற்கு நற்பயன் விளையும். தமிழர்கள் தமது சுய கௌரவத்துடன், உரிமைகளுடன் சமத்துவமாக வாழ வகை செய்யும் ஒரு நிரந்தரத் தீர்வுக்கான நீண்ட பாதையின் ஆரம்பப் புள்ளியாக இது அமைதல் வேண்டும்.

பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதை அடுத்து குடாநாட்டுக்கான போக்குவரத்துத் தடையும் அகற்றப்பட வேண்டும். அப்போது தான் பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதன் உண்மையான பலாபலனைத் தமிழ் மக்கள் அனுபவிக்க முடியும். போக்குவரத்துத் தடை நடைமுறையில் இருக்கும் வரை பொருளாதாரத் தடை நீக்கம் முழுப்பயனையும் தராது. மக்கள் கஷ்டங்கள் தொடரவே செய்யும்.

அரசு இது விடயத்தில் சுயமாகவே நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டும். அதனைச் செய்யுமா?

மூன்றாவது கட்டமாக யுத்த நிறுத்தம் செய்யலாம். அதுவே அமைதிக்கான சமாதானத்துக்கான தீர்வு காண்பதற்குத் தளம் அமைப்பதற்கான அத்திவாரமாக அமையும்.

அரசின் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தோரின், சிங்களவரின் நலனுக்காக பொருளாதாரத் தடையை நீக்க இணங்கிய ஜனாதிபதி, தமிழர் நலனுக்காகப் போக்குவரத்துத் தடையை நீக்கி, யுத்த நிறுத்தமும் செய்யலாம் அல்லவா? தமிழர் நலனில் அக்கறை இருந்தால் அவர் நிச்சயம் அது குறித்துச் சிந்திப்பார்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தொடர்ந்து முயற்சி செய்கிறோம்

## இந்தியாவிடம் ரணில் விளக்கம்

கொழும்பு, ஜூன் 23

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக்காண அரசாங்கம் தொடர்ந்து முயற்சி எடுத்து வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிடம் கூறியுள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலையையடுத்து இலங்கையின் பாதுகாப்பு மற்றும் அரசியல் நிலைமை பற்றி இந்தியாவுக்கு அவர் விளக்கிக்கூறியுள்ளார்.

இந்திய வெளிவிவகார துணை அமைச்சர் ஆர். எல். பாட்டியாவைசந்தித்தபோது, பிரேமதாஸாவின் படுகொலையை அடுத்து ஏற்பட்ட அதிகார மாற்றத்தின் போது முதிர்ச்சியுடனும், உறுதியுடனும் நடந்துகொண்டமைக்காக இலங்கை அரசை பாட்டியா பாராட்டினார்.

இந்திய நிதியமைச்சர் மன்மோகன் சிங்கையும் பிரதமர் சந்தித்தார். (ஒ-3)

# வீரக்குமார் மூலம் முக்கிய தகவல்கள் புலிகளுக்குக் கிடைத்திருக்கலாம்

## புலனாய்வு அதிகாரிகள் சந்தேகம்

கொழும்பு, ஜூன் 23

பிரேமதாசாவைக் கொலை செய்ததாகக் கூறப்படும் பாபு அல்லது குமார் என்று அழைக்கப்படும் வீரக்குமார் பிரேமதாசாவின் மெய்ப்பாதுகாவலர்கள் மற்றும் உயர் பாதுகாப்பு அதிகாரிகளுடன் தாம் கொண்டுள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி வடக்கு-கிழக்கு யுத்த திட்டங்கள் பற்றி முக்கிய தகவல்களைப்பெற்று யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துக்கு அனுப்பி இருக்க முடியும்.

பிரேமதாச கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் புலனாய்வுத் துறையினர் மேற்கண்டவாறு பலமாகச் சந்தேகிக்கின்றனர் என்று ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கொலையாளியான வீரக்குமார் சில சந்தர்ப்பங்களில் சி. ஐ. டி அதிகாரி போன்று நடந்துகொண்டார்.

அவரை இரகசியப் பொலிஸ் அதிகாரி என்றே சில பொலிஸ் அதிகாரிகளும் எண்ணி நடந்து கொண்டனர்.

இதன் காரணமாக மறைந்த ஜனாதிபதியின் மெய்ப்பாதுகாவலர்களுடனும் அவரது வீட்டிலும் சுதந்திரமாக நடமாட வீரக்குமார் அனுமதிக்கப்பட்டார்.

இப்படி 'ஐலண்ட்' பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

# பிரேமாவின் வீட்டுப் பணியாளர்கள் 27 பேரும் வேலையிலிருந்து நீக்கம்

கொழும்பு, ஜூன் 23

ஜனாதிபதி மாளிகை மற்றும் சுசரித்த இல்லம் ஆகியவற்றில் வீட்டுப் பணியாளர்களாகவும் சமையல்காரர்களாகவும் பணிபுரிந்து வந்த 27 பேரும் இம்மாதம் 15ஆம் திகதி முதல் வேலையில் இருந்து நீக்கப்பட்டனர்.

ஜனாதிபதி செயலகப் பணிப்பின் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இப்பணியாளர்களை கில்ஸ் நிறுவனத்தின் ஹோட்டல் பிரிவு வழங்கியிருந்தது.

இப்பணியாளர்களுக்குப் பொறுப்பான இயக்குநராக இருந்த பொபி ஆடம்ஸ் என்பவரும் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

கடந்த ஒரு மாத காலமாக இவர் ஜனாதிபதி செயலக உத்தரவுகளை ஏற்கத் தவறினார் என்றும், தமது உயர் அதிகாரிகளுக்கு அவ்வப்போது தகவல்களை தெரிவிக்கத் தவறியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பதவி இழந்த 27 பணியாளர்களுக்கும் கில்ஸ் நிறுவனம் வேறு ஹோட்டல்களில் வேலை வழங்கியுள்ளது. (இ-எ)

## மணிவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூன் 23

காரைநகர் மணிவாசகர் சபையினர் நடத்தும் மணிவாசகர் குருபூசையும் விழாவும் வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோவிலில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். தெய்வீகப் பேருரைகளும், பொன் விழா மலர் அறிமுகவுரையும் இடம்பெறும். அத்துடன் மணிவாசகர் சபை நடத்திய சைவசமயப் பாடப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியும் இடம்பெறும். (அ)

o o o

நால்வர் திருமுறை மன்றத்தினரின் ஏற்பாட்டில் நீராவியடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் நாளை வியாழன் காலை 8 மணிக்கு மணிவாசகர் குருபூசை நடைபெறும். அன்றைய தினம் பூசையுடன் சுவாமிகள் புராணபடனமும் இடம்பெறும். (த)

o o o

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் நாளை மாணிக்கவாசகர் குருபூசை அதிபர் திரு. க. செல்வக்குமாரன் தலைமையில் நடைபெறும். (த-152)

o o o

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்தில் நாளை வியாழன் மாணிக்கவாசகர் குருபூசை நடைபெறும். விசேட அபிஷேகம், திருவாசகம் முற்றோதல், அன்னதானம் ஆகியவை அன்றையதினம் இடம்பெறும். (த)

o o o

செல்வச்சந்நிதி அடியார் மடத்தில் நாளை காலை முதல் மாலைவரை மாணிக்கவாசகர் குருபூசை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. நிகழ்ச்சியில் மகேஸ்வரர் பூசையும், காலை 9.30 மணிக்கு மாணவர்களுக்கான திருவாசக மனனப் போட்டி மற்றும் சொற்பொழிவு, பரிசு வழங்கல் ஆகியவை இடம்பெறும். (த-155)

o o o

நல்லை ஆதீனத்தில் நாளை வியாழக்கிழமை மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை நடைபெறவுள்ளது. காலை 8 மணி தொடக்கம் திருவாசக முற்றோதலும், மற்பகல் 11 மணிக்கு அபிஷேகமும், விசேட பூசையும், மாலை 5 மணிக்கு வீதியுலாவும் இடம்பெறும். (ஒ)

o o o

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரசுவாமி கோவிலில் மாணிக்கவாசகர் குருபூசையை முன்னிட்டு நாளை காலை ஏழு மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையும், திருவாசக முற்றோதலும் நடைபெறும். மாலையில் மாணிக்கவாசகர் வெளிவீதி உலா இடம்பெறும். (அ)

## ஆலய உற்சவங்கள்

தாவடி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகராலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை நடைபெறும். (க)

o o o

கோப்பாய் தெற்கு வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (க-72)

o o o

வழர்கம்பரை முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இன்று புதன்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

o o o

ஏழாலை மேற்கு கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை நண்பகல் 12 மணிக்கு மாணிக்கவாசகர் குருபூசையும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும். மாலை 5-30 மணிக்கு பெரிய புராண படனம் இடம்பெறும்

o o o

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி சப்பறமும், இரண்டாம் திகதி தேர்த்திருவிழாவும், 3ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். 5ஆம் திகதி திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழா நடைபெறும்.

தினசரி இரவு 7.30 மணி முதல் 8.30 மணிவரை கம்பன்கழக அமைப்பாளர் திரு. ஜெயராஜின் கம்பராமாயண விரிவுரை இடம்பெறும் (ஒ-க-69)

o o o

அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் இன்று மாலை 4 மணிக்கு சதுர்த்தி உற்சவமும் மணவாளக்கோல உற்சவமும் நடைபெறும்.

o o o

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அடுத்த மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

o o o

வண்ணார் பண்ணை கோட்டையம்பதி அருள் மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு சதுர்த்தி விழா அபிஷேகம், பூசையுடன் நடைபெறும். [த-15]

o o o

உரும்பராய் ஒடையம்பதி கற்பகப்பிள்ளையார் ஆலயத்தின் உற்சவத்தை முன்னிட்டு இன்று மாலை 6.15 மணிக்கு வித்துவான் பிரம்மஸ்ரீ சே. இராமநாதனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். (உ-154)

## உணவு முத்திரை விநியோகம்

சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம் பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய மாணவர் உணவு முத்திரைக்கான பொருள்களை இன்று புதன் முதல் விநியோகிக்க உள்ளது. ஜூலை 10 ஆம் திகதி வரை விநியோகம் இடம்பெறும்.

இதேவேளை — யாழ். செயலகத்தினால் வழங்கப்பட்டரவை பயறு, மைசூர், பருப்பு சிந்தாமணிக் கடலை வெள்ளைப் பச்சை அரிசி ஆகியவை சுன்னாகம் ப.நோ.கூ. சங்கக் கிளைகள் மூலம் கடந்த திங்கள் முதல் கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. (த)

# 'ஜனசவிய' திட்டத்தை தொடர அரசு அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஏற்கனவே அனுமதிக்கப்பட்டதும் ஆரம்பிக்கப்பட்டதுமான "ஜனசவிய" கருத்திட்டங்களை யாழ் மாவட்டத்தில் தொடர்ந்து மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் இவ்வாறு அறிவி[illegible]

"ஜனசவிய" [illegible] ஆரம்பி[illegible] திட்டங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருப்பதாக அண்மையில் தகவல் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

ஆனால் தற்சமயம் தொடர்ந்து செயற்படுத்த அரச அதிபருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இதனை அடுத்து அனுமதி வழங்கப்பட்டிருப்பதான தகவலை சகல பிரதேச செயலர் [illegible] அரச அதிபர் [illegible] அறிவித்துள்ளார். (ஒ-5)

## பிரேமாவின் பாதுகாப்புப் பிரிவு

# பொலீஸ் அதிகாரிகள் பலர் ஓய்வுபெற விருப்பம்

கொழும்பு, ஜூன் 23

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்களில் அநேகமானோர் சேவையில் இருந்து ஓய்வுபெற விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்துள்ளனர்.

இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர், சார்ஜன்ட் தரத்திலுள்ள 9 பேரின் இளைப்பாறும் விண்ணப்பங்கள் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் அனுமதி அளித்துள்ளார்.

மேலும் இளைப்பாற விண்ணப்பித்துள்ள ஏனைய 10 உத்தியோகத்தர்களின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## வடக்கு-கிழக்கு மட்டுமன்றி

# தமிழர் சகல இடங்களிலும் ஆட்சி அமைக்க முடியும்

## இப்படிக் கூறுகிறார் தொண்டா

கொழும்பு, ஜூன் 23

"தமிழ் மக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டால் வடக்கு-கிழக்கில் மட்டுமன்றி சகல இடங்களிலும் ஆட்சி அமைக்க முடியும்."

இப்படிக் கூறுகிறார் சுற்றுலா, கிராமிய தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமான்.

கொழும்பு றோயல் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழினம் இந்த நாட்டில் தலை நிமிர்ந்து வாழ முடியுமா? என்ற ஒரு நிலை இருந்ததை நாம நன்கு அறிவோம். இன்று அந்த அவல நிலை முற்றாக மாறி தமிழும் இந்த நாட்டின் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வொன்றின் மூலமே சரியான பரிகாரம் காண முடியும் என்ற உண்மையை அரச தரப்பினர் மட்டுமன்றி அனைவரும் உணரத் தொடங்கி விட்டனர். இந்த நல்ல சூழ்நிலையை ஒன்றுபட்டு நின்று நன்றாகப் பயன்படுத்தினால் நாம் இதில் நிச்சயமாக வெற்றி காண முடியும்" என்றார். (ஒ-3)

## கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு:

# தமிழ்-முஸ்லிம் குழுக்களிடம் தெளிவான நிலைப்பாடில்லை

கொழும்பு, ஜூன் 23

கிழக்கில் இணைப்புக் குறித்து நடத்தப்பட இருப்பதாகக் கூறப்படும் சர்வசன வாக்கெடுப்புக் குறித்து தமிழ் மற்றும் முஸ்லிம் குழுக்கள் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை.

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்குச் சமீபத்தில் விஜயம் செய்த சர்வதேச சமாதானக் குழுவினர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

எமது குழுவைச் சந்தித்துப் பேசிய கிழக்கு மாகாண இராணுவத் தளபதி லக்கி அல்கம, சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதற்கான தயாரிப்புவேலைகளை மேற்கொள்ளக் குறைந்தது ஆறு மாதங்கள் தேவைப்படும் என்று தெரிவித்தார்.

எமது குழு ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்தித்துப் பேசியது.

அச் சந்திப்பு திறந்த மனதுடன் அமைந்தது. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தம்மால் முடிந்ததை அவர் செய்து வருகின்றார்.

இவ்வாறு சர்வதேச சமாதானக் குழுவினர் தெரிவித்தனர்.

இவர்கள் தமது வடக்கு-கிழக்கு விஜயம் பற்றிய அறிக்கையை செடக் அமைப்பிடம் சமர்ப்பித்துள்ளனர்.

## பாடசாலைகளில்

வடமராட்சிக் கல்விக்கோட்டத்தில் உள்ள பருத்தித்துறை, புலோலி, வல்வெட்டித்துறை ஆகிய கொத்தணிகளைச் சேர்ந்த பாடசாலைகளுக்கான ஆரம்பவிஞ்ஞான சேவைக்கால பயிற்சி வகுப்பு இன்று காலை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் நடைபெறும்.

உடுப்பிட்டி, கரவெட்டி, நெல்லியடி ஆகிய கொத்தணிகளுக்குட்பட்ட பாடசாலைகளுக்கு நாளை வியாழன் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும்—

நாகர்கோவில், உடுத்துறை ஆகிய கொத்தணிகளுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு நாளை மறுதினம் அம்பன் அமிதக பாடசாலையிலும் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெறும். (த-118)

## இன்று

பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரை இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (க)

o o o

அளவெட்டி வித்துவான் சி. நா. கணேசபண்டிதன் மானிப்பாய் மருதடி விநாயகர் மீது பாடிய திருப்பதிக நூல் வெளியீடு இன்று புதன் மாலை 5 மணிக்கு மருதடி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும். (த 152)

o o o

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலைய 23 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஆரம்ப நிகழ்ச்சியாக அதிபாலர் பிரிவுக்கு பேச்சுப் போட்டி ஒன்று இன்று மாலை 4 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெற விருக்கிறது. ஒ

## நாளை

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் பற்றி அதன் பிரதிநிதி நிகழ்த்தும் விளக்கவுரையும், படக்காட்சியும் நாளை வியாழன் பிற்பகல் 2 மணிக்கு யாழ். செயலக வேட்போர் மன்றில் நடைபெறும். அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இவர்களின் செயற்பாட்டுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகின்றது. க)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். பல்கலைக்கழக தமிழ்மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று நடைபெற இருந்த புலவர் நா. சிவபாதசுந்தரனாரின் "புறப் பொருள் வெண்பாமாலை" புத்தக வெளியீடு தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமைக்குப் பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது [த]

## தபால்களை சேர்க்கவும்

எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக வெளியூர்க் கடிதங்களை தபால் பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபால் அதிபர் திரு. சு. கோடீஸ்வரன் அறிவித்துள்ளார்.

தபால்கள் 28ஆம் திகதி திருகோணமலைக்குச் செல்லும் 'குமண' கப்பலில் அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

### தடை நீக்கப்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு சென்றுள்ள யாழ் அரச அதிபர் குடாநாட்டுக்கு பொருள்களை அனுப்பி வைப்பது குறித்து அரசுடன் பேசுவார். அதற்கு இரண்டு மூன்று நாட்கள் எடுக்கலாம்.

புலிகளும் அரசினரும் இப்போது உடன்பாடு கண்டுள்ளனர். அதன்படி காவலில் உள்ளோர் இப்போது யுத்தக் கைதிகளாகக் கருதப்படமாட்டார்கள்.

உடன்பாட்டுக்கு அமைய அரசு பொருள்களை அனுப்பத் தொடங்கியதும் இவர்கள் அனைவரும் விடுவிக்கப்படுவர்.

இணங்கியபடி பொருள்களை அனுப்ப அரசு தவறினால் அரசு ஏற்கனவே கூறியது பொய் என்றே கருதப்படும்— என்றும் பிரிகேடியர் வீரசேகரா கூறினார். (உ-த-3-5)

### கைதிகளின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி ஊடாக விசேட விமானத்தில் இரத்மலானை விமான நிலையத்தை வந்தடைந்தனர். (உ-எ-க-3-5-15)

### லலித் கொலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டவை அங்கு வாங்கியதாக இலங்கைக்குக் கிடைத்த புலனாய்வு அறிக்கைகள் தெரிவிப்பதாக "சண்டே ஒப்சேர்வர்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

லெபனானில் உள்ள பயிற்சி முகாம்களில் தற்கொலைப் படையை சேர்ந்த சுமார் நூறு பேர் பயிற்சி பெற்றனர் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவிருந்தார். (உ-எ)

### இந்தியாவுடன்..:

['ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்தியப் பிரதமர் திரு நரசிம்மராவுடன் நேற்றுப் பகல் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் — தமது இந்திய விஜயத்தின் முடிவில் — ரணில் விக்கிரம சிங்கா பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நேற்று மாலை நடத்தினார். அப்போது செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையிலேயே முன்கண்டவாறு தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

பொருளாதாரத் துறையிலேயே எமது இரு நாடுகளும் கூட்டு முயற்சியில் இறங்க விரும்புகின்றன. புதிய வகையில் வர்த்தக பரிமாற்றங்களைச் செய்வது குறித்து ஆராய்ந்துள்ளோம்.

கிழக்கு மாகாணத்துக்கென அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில் அரசு ஈடுபட்டுள்ளது விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களையும் இராணுவ நடவடிக்கை தொடரும்

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் இன்னும் வெற்றி காணும் நிலை ஏற்படவில்லை என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். — என்று அவர் தெரிவித்தார்.

இதே வேளை—

தமிழ் நாட்டில் இருந்து ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் விடயம் குறித்து இரு பிரதமர்களின் சந்திப்பின் போது பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [அ-எ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி. வேலுப்பிள்ளை முத்தாச்சி

காரைநகர் சந்திரத்தை, களபூமியை பிறப்பிடமாக கொண்ட திருமதி. வேலுப்பிள்ளை முத்தாச்சி வவுனியாவில் காலமானார்.

இவர் காலம் சென்ற சந்தப்பு வேலுப்பிள்ளையின் பாரியாரும், நாகேஸ்வரி, லோகேஸ்வரி, காலஞ் சென்ற பாலகிருஷ்ணன், மற்றும் பரமேஸ்வரி, ஆனந்தசிவம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் புலேந்திரராசா, சாரதாதேவி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் சௌரி, குமாரதாஸ், மோகன் கண்மணிராஜா, சிவகுமார், ராஜ், மதுரா ஆகியோரின் பேத்தியாரும் ஆவார்.

அவரது இறுதிக் கிரியை 22. 6. 93 இல் வவுனியாவில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பு. நாகேஸ்வரி (மணி)
(மகள்)

79, பலாலி றோட்,
சந்தர்மடம், யாழ்ப்பாணம். [26205]

### வேலாயுதபிள்ளை இரத்தினம்மா

காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் அருமை மனைவி இரத்தினம்மா 22. 06. 93 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் பாலசுப்பிரமணியம் (தேசிய பயிலுநர் சபை) பத்மினி (பெரியபுலம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சனாதேவி, ஜெயசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஜாவின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் இன்று 23. 06. 93 புதன்கிழமை முற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு. ப. 10. 00 மணிக்கு பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
வே. பத்மினி
(மகள்)

441, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 5297

### பொன்னம்பலம் சிவசம்பு

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 10ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான பொன்னம்பலம் சிவசம்பு 22 - 06 - 93 செவ்வாய்க்கிழமையன்று காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், ராஜேஸ்வரி (ஜேர்மன்), புலேந்திரராஜா (ஜேர்மன்), இந்திரன் (ஜேர்மன்), மலர், சிவமலர் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பொன்னம்மா, நாகேசு (திரு அம்பாள் கபே உரிமையாளர்), காலஞ் சென்ற இராசரெட்ணம், காலஞ்சென்றபூரணம், அன்னலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாழ்ப்பாணம் ஆவரங்கோட்டை இல்லத்தில் இன்று 23 - 06 - 93 புதன்கிழமை பகல் 12 மணியளவில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
பொ. நாகேசு
[திரு அம்பாள் கபே உரிமையாளர் முல்லைத்தீவு]
சகோதரர்
[புங்குடுதீவு]

ந. சந்திரபாலா
குளப்பிட்டு ஊடாக
உரிப்புலம்,
ஆவரங்கோட்டை. (26215)

### திருமதி சின்னத்தம்பி இராசமலர்

குளமங்கால், மல்லாகத்தில், வசித்தவரும், பின்னர் இடம்பெயர்ந்து நவாலி வடக்கில் வசித்தவருமாகிய திருமதி சின்னத்தம்பி இராசமலர் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர் சின்னத்தம்பி (சாரதி C.T.B.) யின் அன்பு மனைவியும், ஜெயந்திமலர் (சித்தா- ஆசிரியை, கனிஷ்ட வித்தியாலயம் மல்லாகம்), நாஜினி (கெங்கா-கனடா), சியாமளா (அமுதா- யாழ் பல்கலைக்கழகம், வர்த்தகபீடம், மூன்றாம் ஆண்டு), சிறிகாந்தவேழ், சிவதர்ஷினி (மாணவி யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா, சின்னராசா, சிவராசா (குட்டி), சர்வானந்தராசா (சாந்தன்), லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரவீந்திரன் [கனடா] அவர்களின் மாமியும், நாகமணி, செல்வத்துரை, ஐயாத்துரை ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று (23-06-1993) புதன்கிழமை காலை 10-30 மணியளவில் நவாலி வடக்கு சின்னராசாவின் இல்லத்தில் இருந்து ஆரியம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சின்னராசா
(சகோதரன்)

நாச்சிமார் வீதி,
நவாலி. (26214)

### கந்தையா வேலுப்பிள்ளை
(பிரபல வர்த்தகர், பதுளை)

வேலணையைச் சேர்ந்த கந்தையா வேலுப்பிள்ளை 01-06-93 அன்று வேலணையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற கனகசபதி, இரத்தினம், திலகமலர், யோகராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரகுநாதன் (விலைமதிப்புப் பரிசோதகர், மதிப்பீட்டாளர், இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்), இராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரி, வேதேவி, ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் வேலணையில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
வே. கணபதிப்பிள்ளை
(மகன்)

1010/24, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். [26213]

## யுத்தக் கைதிகள்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராஜா கைதிகள் இவரையும் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா முன்னிலையில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதியிடம் ஒப்படைத்தார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், யாழ். மாவட்டத் தளபதி திரு அப்பு, யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, மன்னார் மாவட்ட விசேட தளபதி திரு. ஜான், யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மற்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பிரதிநிதிகள் ஆகியோர் விடுவிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

அஜி விக்கிரம (மாத்தளை), திஸநாயக்கா (கம்பளை), லால் குணசேகர (சப்பஹ), விஜயகோன் (நுவரெலியா), சரத் சமந்த (அம்பாறை) ஆகிய நால்வருமே நேற்று விடுதலை செய்யப்பட்டனர். (உ-5)

## பரியோவான் கல்லூரி

இன்ரரக்ட் கழகத்தினரின்
சமூகசேவை நிதிக்காக
சப்தஸ்வராவின்

# "சங்கீத மேகங்கள்"

இன்று (23 06-1993) புதன் மாலை 2.30 மணியளவில் பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.
அன்பளிப்புகள் 20/- 50/- 100/- மண்டப வாயிலில்

பரியோவான் கல்லூரி இன்ரரக்ட் கழகம்

அன்பளிப்பு:
ஜெயன் போட்டோ, யாழ்ப்பாணம்.
(26209

## அருள்மிகு
## கொக்குவில் தாவடி வேம்படி
# முருகமூர்த்தி கோவில்
## மகோற்சவ கால தெய்வீக அருளுரை

பொருள்: கந்தபுராணம்

நிகழ்த்துபவர்:
கந்தநிதி திரு. த. சிவகுமாரன் B. A.
(யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர், அமைப்பாளர் காரைநகர் கம்பன்கழகம்)

காலம்: 24 06-93 தொடக்கம் 04 07 93 வரை

நேரம்: மாலை 7.45 தொடக்கம் 8.45 வரை

| நாளும்: | | பொருளும்: |
|---|---|---|
| 24-06-93 | — | சரித நாயகன் சரிபார்த்தான் |
| 25-06-93 | — | பெண்களில் தோன்றிய எம்பிராட்டி |
| 26-06-93 | — | முருகோதயம் |
| 27-06-93 | — | தந்தைக்கு உபதேசித்த தனயன் |
| 28-06-93 | — | வீராதி வீரன் சூராதி சூரன் |
| 29-06-93 | — | மெய்ச் சோதியும் கட்சோதியும் |
| 30-06-93 | — | முதல் சந்திப்பு |
| 01-07-93 | — | மண்ணரான மாவீரன் |
| 02-07-93 | — | வனமும் மானமும் |
| 03-07-93 | — | குஞ்சரி கோபித்த செயல் |
| 04-07-93 | — | மாறிலா வள்ளி |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— தர்மகர்த்தா சபை,

அன்பளிப்பு:
சண்முகன் வர்த்தக நிலையம்,
கே கே. எஸ் வீதி, குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.
(சி-5295)

## சர்வசன...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தனவா என்பதைக் கண்டறிவதற்கு மங்கள முனசிங்க தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு தீர்மானித்ததை தொடர்ந்து எழுந்துள்ள குழப்பகரமான அரசியல் சூழ் நிலையை ஆராய்வதற்காக வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூரின் முன்முயற்சியைத் தொடர்ந்து இக்கூட்டம் கூட்டப்பட்டது. ஹமீத் தொடர்ந்து பேசுகையில் "வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் தொடர்ந்து இணைந்திருக்க வேண்டுமா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக கிழக்கில் நடத்தப்பட இருக்கும் சர்வசன வாக்கெடுப்பு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் எந்த ஒரு முயற்சியுடனும் இணைக்கக் கூடாது" என்றார்.

வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் இங்கு உரை நிகழ்த்துகையில் கிழக்கு சர்வசன வாக்கெடுப்பு விவகாரத்தை மிகவும் அக்கறையுடன் முஸ்லிம் மக்கள் அணுக வேண்டிய தருணம் வந்து விட்டது என்றார்.

இக்கூட்டத்தில் தோட்ட சேவைகள் அமைச்சர் எம்.எல். எம். அபூசாலி போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் யூ. எல். எம். பாரூக் முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம். பிக்களான அபூபக்கர், ஹிஸ்புல்லா, ஐ. தே. க எம். பியான எம். எச் ஆமீர், முன்னாள் கிழக்கு எம். பிக்கள் சின்னலெவ்வை, அகமது ஆகியோர் உட்பட பல முஸ்லிம் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

தற்போதைய நிலையில் சர்வசன வாக்கெடுப்பு ஒரு முக்கிய பிரச்சினையே அல்ல என்று இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர். (இ)

## அபிவிருத்திக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உதவும் நாடுகள் வழங்கும் நிதி உதவி பாதுகாப்புச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்பட மாட்டாது என்று சிரேஷ்ட அரச அதிகாரிகள் உறுதியளித்திருந்தனர்.

எனினும் —

கடந்த ஆண்டில் உதவி வழங்கும் நாடுகள் பொருளாதார வளர்ச்சிக்கு அளித்த நிதி உதவிகளில் ஒரு பகுதி இந்த நடைமுறையை மீறி யுத்தச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது என்றும் அவ்வதிகாரிகள் கூறினார்கள்.

இதேவேளை —

கடந்த ஆண்டு உதவும் நாடுகள் தருவதாக உறுதியளித்த நிதி உதவியில் 60 சத வீதமானவை இது வரை பயன்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### குமாரவேற்பிள்ளை வைத்திலிங்கம்
(நடராஜா - புங்குடுதீவு)

வியாங்கொடை லிங்கம் ஸ்ரோர்ஸ், முன்னாள் உரிமையாளர், சுப்பிரமணியம் குமாரவேற்பிள்ளை வைத்திலிங்கம் கனடாவில் 14-06 93 அன்று காலமானார். இவர் புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முன்னாள் வியாங்கொடை பிரபல வர்த்தகர் குமாரவேற்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், மாகோ பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற திரு சின்னத்தம்பி தம்பதிகளின் அன்பு மருமகனும், குணவதி அவர்களின் அன்புக் கணவரும், கனடாவில் வசிக்கும் ஜஸ்வரி, வசந்தகுமார், விக்னேஸ்வரி, கிருஷ்ணகுமார், பத்மகுமார், உதயகுமார், ஜெயக்குமார், ரூபசாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு. லோகேந்திரன் (உரிமையாளர், மாகோ துர்க்கா மொன்றியல், கனடா), கனடாவில் வசிக்கும் பிரபாகரன், சுதர்சனி, சுபாஜினி, ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மயில்வாகனம், காலஞ்சென்ற மார்க்கண்டு (சமத்தொழில்), பாலசிங்கம், திருமதி அமிர்தசௌரி கார்த்திகேசு, திருமதி நவநீதம் (கனடா), திருமதி ஞானசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி கண்ணம்மா (கனடா), காலஞ்சென்ற சமலாம்பிகை, காலஞ்சென்ற கார்த்திகேசு (பால் வழங்கும் நிலையங்கள் மேற்பார்வையாளர்), காலஞ்சென்ற சொல்லானந்தம் (வர்த்தகர், சுந்தரலெச்சுமி, திரு பொ. சிவபாலன் (வர்த்தகர், கொழும்பு), திருமதி பா. ஜெயலட்சுமி, திரு. குமாரசாமி பிரபல வர்த்தகர், கொழும்பு), திரு அருளம்பலம் (கனடா), திரு விஸ்வநாதன், திரு கனகலிங்கம் (கனடா), திருமதி கனகசபை (கனடா), திருமதி கு. புஷ்பவதி, திருமதி க. பாக்கியலட்சுமி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், கனடாவில் உள்ள செல்வி ஆர்த்திகா, டாமியா, நம்மியா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16 - 06 - 93 மாலை கனடா காபோரவில் பொது ஈமக்கிரியை மண்டபத்தில் தகனம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. பாலசுந்தரம் (சகோதரன்)

இல. 33, பழைய தபாற் கந்தோர் ஒழுங்கை,
தலையாழி,
கொக்குவில். [26212]

### வைரமுத்து சின்னத்துரை

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சின்னத்துரை நேற்றிரவு காலமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் சோதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராஜா, லலிதா, செல்வநாயகம் [டென்மார்க்] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், சின்னத்துரை அம்மாக்குட்டி மற்றும் செல்லம்மா, இராசையா ஆகியோரின் மைத்துனரும், தவனேஸ்வரன் (தயாளன் ஸ்ரோர் கோண்டாவில் கிழக்கு), ரஞ்சினிதேவி, தயாநிதி [டென்மார்க்] ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜனி, ஜனனி, துஷ்ஜெயந்தினி, தபேசன், தாட்சாயினி, செந்தூரன், கிருஷாந்தி, அயந்தியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று [23-6-93] நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. தவனேஸ்வரன்
[மருமகன்]

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். [26218]


மன்ற அரங்கில் — மூன்று நாட்கள்

★ மீண்டும் அழைக்கின்றோம் ★

திருமறைக் கலாமன்றம்
நடத்தும்
"இலக்கிய விழா"

| வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|
| 25-06-93 | 26-06-93 | 27-06-93 |

- பேராசிரியர் அ. சண்முகதாஸ் - வெள்ளி
- வித்துவான் க. சொக்கலிங்கம் - சனி
- பேராசிரியர் கா. சிவத்தம்பி - ஞாயிறு

இவர்கள் தலைமையில் இலக்கிய இன்பம் காண வாரீர்

நேரம்:- மாலை 5. 30 மணி

தினமும்:- நடனம் | நாடகம் | நாட்டியம் (C/5896)


இப்பத்திரிகை ... (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 393/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23 - 06 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org